BEFORE THE COURT OF HON'BLE CHIEF JUDICIAL MAGISTRATE CUM SPECIAL JUDGE, KANYAKUMARI @ NAGERCOIL

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8082857
C

1. District : மாவட்டம் KANYAKUMARI — PS காவல்நிலையம்: Vigilance + Anti-Corruption, Kanyakumari — Year ஆண்டு: 2023 — FIR No. மு.த.அ. எண்: 07/23 — Date நாள்: 27.10.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 (As amended in 2018). — Sections பிரிவுகள்: 7, 8
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: –
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 26.10.2023 — Date from : நாள் முதல் Before 16.40 Hrs — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு – — Time from : நேரம் முதல் – — Time to : நேரம் வரை –
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.10.2023 — Time : நேரம் 08.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.10.2023 — Time : நேரம் 08.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி Sub-Registrar Office Edalakudy, Kanyakumari District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Magesh Manickappan — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Deputy Thasildar — (g) Address : முகவரி L-Section, Office of the District Collector, Kanyakumari District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. A. Andrew Mesmer, S/o ArulRajan, Assistant, Sub-Registrar (I/c), Edalakudi Sub-Registrar Office (2) Selvi. M.P. Reshma, D/o Mani, Junior Assistant, Edalakudi Sub-Registrar Office (3) Tmt. H. Rejila aged 38, W/o Tr. Mario Leo, Maathiravillai, Karungal, IP Camera Operator, Edalakudy Sub-Registrar Office, (4) Tr. J. Sam Muthunayagam aged 68, S/o Jebamani, Door No. 6-82, Kumalam, Kanyakumari District (5) Tr. R. Vignesh aged 30, S/o Tr. S. Rajendran, Karupan Chettiar Street, Kottar (6) Tr. R. Vignesh aged 24, S/o R. Rajendran, Door No. 40A 5/4, Golden House, Ammankovil North Street, Pallivillai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. C. Sivalankai ~~[illegible]~~ Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 27/10/2023 — [signature] 27/10/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 27.10.2023 10.00 Hrs.

Name: பெயர் G. HECTOR DHARMA RAJ
Rank: நிலை Addl. Superintendent of Police, Vigilance & Anti-Corruption, Kanyakumari.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p.2

கன்னியாகுமரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 7/2023முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12 –ன் இணைப்பு.

மதிப்பிற்குரிய அய்யா,

| | |
|---|---|
| குற்ற அலுவலர்கள் :-<br><br>(i). திரு.A.ஆன்ட்ரூ மெஸ்மர்,<br>த/பெ.அருள்ராஜன்,<br>உதவியாளர்<br>சார்பதிவாளர் (பொறுப்பு)<br>இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகம்<br><br>(ii). செல்வி. எம்.பி. ரேஷ்மா வயது 23,<br>த-பெ திரு.மணி<br>இளநிலை உதவியாளர்,<br>இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகம்.<br><br>(iii) Tmt.W.ரெஜிலா வயது 38,<br>க-பெ திரு.மரியலியோ,<br>மாத்திரவிளை, கருங்கல்<br>IP Camera Operator<br>இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகம்.<br><br>(iv)திரு.ஜே.சாம்முத்துநாயகம் வயது 68,<br>த-பெ ஜெபமணி,<br>கதவு எண்.6-82,<br>புத்தளம், கன்னியாகுமரி மாவட்டம்.<br><br>(V) திரு.ஆர்.விக்னேஷ் வயது 30,<br>த-பெ திரு.எஸ்.ராஜேந்திரன்<br>கருப்பன்செட்டியார் தெரு, கோட்டார்<br><br>(VI) திரு.ஆர்.விக்னேஷ் வயது 24,<br>த-பெ பி.ராஜேந்திரன்,<br>கதவு எண்.40 A 5/4,<br>கோல்டன் ஹவுஸ்,<br>அம்மன்கோவில் வடக்கு தெரு,<br>பள்ளிவிளை | பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :- இன்று 27.10.2023 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் கூடுதல் கண்காணிப்பாளர் G.ஹெக்டர் தர்மராஜ் ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.K.மகேஷ்மாரியப்பன், துணை வட்டாட்சியர்,L-பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி துணை ஆய்வு குழு அலுவலர் என்ற நிலையில் ஒரு புகார் மனுவுடன், செயல்முறை நடவடிக்கை நாள்.26.10.2023, ஆவண நகல்கள் மற்றும் பணம் ரூ.1,21,150/- ஆகியவற்றை இணைத்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:-அனுப்புநர் திரு.K.மகேஷ் மாரியப்பன், துணை வட்டாட்சியர், L-பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் காவல் கூடுதல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, கன்னியாகுமரி மாவட்டம். ஐயா கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு, வில்லங்கம், நகல் எடுப்பு மற்றும் பதிவு செய்வது சம்பந்தமான வேலைகளுக்கு வரும் பொதுமக்களிடம் சார் பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் லஞ்சம் பெற்று வருவதாகவும் அவ்வாறு பெறும் லஞ்ச பணத்தை அலுவலக கணினி அறை மற்றும் கோப்புகளில் மறைத்து வைப்பதாகவும், பொறுப்பு சார்பதிவாளர் ஆவண எழுத்தர்களிடம் தனக்கு உரிய |

லஞ்ச பணத்தை தன்னுடைய இரு சக்கர வாகனத்தின் பெட்ரோல் டாங்க் கவரில் வைக்க சொல்லி பெறுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் எனது தலைமையில் கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை காவல் கூடுதல் கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில், 26.10.2023 ஆம் தேதி மாலை 04.40 மணிமுதல் இரவு 11.50 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின்போது இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்திலுள்ள முன் காம்பவுண்டினுள் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலக பொறுப்பு சார்பதிவாளர் திரு.A.ஆன்ட்ரு மெஸ்மா், த/பெ.அருள்ராஜன் அவர்களது TN-75 M 9598 Hero Splendor Pro-வைநான் பொறுப்பு சார்பதிவாளர் திரு.A.ஆன்ட்ரு மெஸ்மா் மற்றும் லஞ்ச ஒழிப்பு அலுவலர்கள் முன்னிலையில் சோதனை செய்ய மேற்படி வாகனத்தின் பெட்ரோல் டேங்க் கவரின் உள் பகுதியில் இரண்டு காக்கி நிற கவர்கள் காணப்பட்டது. அந்த காக்கி நிற கவர்களை பார்வையிட்டதில் ஒரு கவரில் Iyappan தோவாளை என்று எழுதப்பட்டிருந்தது. அந்த கவரை பிரித்து பார்த்ததில் அதன் உள் 500 ரூபாய் நோட்டுக்கள் 58 எண்ணங்களும், 200 ரூபாய் நோட்டுக்கள் 5 எண்ணங்களும் காணப்பட்டன. மற்ற கவரில் Supreme Ajith என்று எழுதப்பட்டிருந்தது. அந்த கவரை பிரித்து பார்த்ததில் அதன் உள் 500 ரூபாய் நோட்டுக்கள் 60 எண்ணங்கள் காணப்பட்டன. மேற்படி பணம் குறித்து திரு.A.ஆன்ட்ரு மெஸ்மா் அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாத காரணத்தினால் அரசு வேலையை செய்வதற்காக பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்றதாக கருதி மேற்படி ரூ60,000/- மகஜர் முலம் கைபற்றப்பட்டது. மேலும் இடலாகுடி சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ளே உள்ள கணிணி அறையில் உள் வந்து சோதனை செய்ததில், வலது புறம் இடப்பட்டிருந்த கணிணி இருந்த IP Camera Operator Tmt.W.ரெஜிலா வயது 38, க-பெ திரு.மரியலியோ, மாத்திரவிளை, கருங்கல் அவர்களது மேஜையை சோதனை செய்ய அதன் இரண்டாவது அறையில் இரண்டு காக்கி நிற கவர்கள் பெயர்கள் மற்றும் பண விபரங்கள் எழுதப்பட்டு காணப்பட்டன. அதில் ஒரு கவரில் ரூ.600-ம் இரண்டாவது கவரில் ரூ.2300-ம் காணப்பட்டது. மேற்படி திருமதி.ரெஜிலாவிடம் அவரது டேபிளின் இரண்டாவது அறையில் இருந்த பணத்துடன் கூடிய கவர்கள் குறித்து கேட்க மேற்படி பணம் ரூ.2300 பொறுப்பு சார்பதிவாளருக்காகவும்,ரூ.600 செல்வி.ரேஷ்மாவுக்காக லஞ்சமாக வாங்கியதாக தெரிவித்தார்கள். எனவே மேற்படி ரூ2,900/- மகஜர் முலம் கைபற்றப்பட்டது. மேலும் அதே கண்ணாடி அறையில் இடது புறம் இருந்த இடலாகுடி சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் செல்வி.ரேஷ்மா அவர்களது கணிணி டேபிளில் இருந்த கோப்புகளை சோதனை செய்ததில் ரூ.7,600 இருந்தது. செல்வி.ரேஷ்மா அவர்களிடம் மேற்படி பணத்தினை பற்றி விளக்கம் கேட்க அவர் கூறிய விளக்கம்

ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாத காரணத்தினால் அரசு வேலையை செய்வதற்காக பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்றதாக கருதி மேற்படி ரூ7,600/- மகஜர் மூலம் கைபற்றப்பட்டது. மேலும் இடலாகுடி சார்பதிவாளர் அலுவலக அறையில் நின்று கொண்டிருந்த திரு.ஜே.சாம் முத்துநாயகம் வயது 68, த-பெ ஜெபமணி, கதவு எண்.6-82, புத்தளம், கன்னியாகுமரி மாவட்டம் என்பவரை சோதனை செய்ததில் அவருடைய வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.45,000 இருந்தது. மேற்படி பணம் குறித்து சரியான விளக்கம் கொடுக்காத காரணத்தினால் திரு.ஜே.சாம் முத்துநாயகம் அவர்களது தம்பி திரு.ஜோசப் அவர்களின் மனைவி திருமதி.லோவிசாள் அன்னபெல் அவர்களின் பெயரில் உள்ள 30 செண்ட் சொத்தை திரு.ஜோசப் பெயருக்கு பவர் கொடுக்க செய்யும் பத்திரத்திற்கு இடலாகுடி சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக கருதி மேற்படி ரூ.45,000 மகஜர் மூலம் கைபற்றப்பட்டது. மேலும் இடலாகுடி சார்பதிவாளர் அலுவலக ஹாலில் நின்று கொண்டிருந்த திரு.ஆர்.விக்னேஷ் வயது 30, த-பெ திரு.எஸ்.ராஜேந்திரன் கருப்பன்செட்டியார் தெரு, கோட்டார் என்பவரை சோதனை செய்ததில் அவரின் இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.4,550 இருந்தது. மேற்படி பணம் குறித்து சரியான விளக்கம் கொடுக்காத காரணத்தினால் இடலாகுடி சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக கருதி மேற்படி ரூ.4,550 மகஜர் மூலம் கைபற்றப்பட்டது. மேலும் இடலாகுடி சார்பதிவாளர் அலுவலக ஹாலில் இருந்த திரு.ஆர்.விக்னேஷ் வயது 24, த-பெ பி.ராஜேந்திரன், கதவு எண்.40 A 5/4, கோல்டன் ஹவுஸ், அம்மன்கோவில் வடக்கு தெரு, பள்ளிவிளை என்பவரை சோதனை செய்ததில் அவரின் மணி பர்ஸில் ரூ.1,100 இருந்தது. மேற்படி பணம் குறித்து சரியான விளக்கம் கொடுக்காத காரணத்தினால் இடலாகுடி சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக கருதி மேற்படி ரூ.1,100 மகஜர் மூலம் கைபற்றப்பட்டது. மேற்படி திடீர் இணைஆய்வின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை மற்றும் பணம் மற்றும் ஆவணங்களையும் தக்க நடவடிக்கைகாக தங்கள் முன்பு சமர்பிக்கிறேன். இப்படிக்கு Sd/- 27.10.2023 (K.MAGESH MARIAPPAN) DEPUTY TAHSILDAR, L SECTION, COLLECTOR OFFICE, NAGERCOIL.Sir, Received the complaint on 27.10.2023 at 08.00 hrs and registered a case in Kanyakumari Vigilance and Anti Corruption Detachment @ Nagercoil Crime No.7/2023 u/s. 7 and 8 of PC Act 1988 (as amended in 2018) on 27.10.2023 at 08.30 hrs.S/d27.10.2023(G.HECTOR DHARMARAJ) ADSP, V&AC, Kanyakumari Detachment @ Nagercoil. The original FIR along with the complaint and Proceedings prepared at the sub-registrar office Edalakudy on 26.10.2023 between 16.40 hrs and 23.50 hrs are

sent to the Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District @ Nagercoil and the copies sent to the concerned officers.

Addl. Supdt. of Police
Vigilance and Anti Corruption
Kanyakumari Detachment
@ Nagercoil